கோப்பல் தமிழ்க் கல்வி மையம்
வாழ்க தமிழ்! வெல்க தமிழ்!


துளிர் – 4
இதழ் – 3

# துளிர்

டிசம்பர்–2018

விளம்பி ஆண்டு
மார்கழி மாதம்

## வேதாளம் சொல்லும் கதை



தெற்கு திசையில் சென்ற பீமன் ஒரு கிராமத்தில் தனது மல்யுத்த திறமைகளை காட்டியபோது அந்த ஊரைச் சேர்ந்த சூலபாணி என்பவன், ''தம்பி உன்னை போன்ற பலசாலியை தான் தேடிக் கொண்டிருந்தேன். நான் மலை ஏறுவதில் விருப்பம் உள்ளவன். அருகில் அஞ்சனமலை என்று ஒரு மலை உள்ளது. அதன் மீது ஏறிபார்க்க எனக்கு ஆசை.. நீ தேடி வந்த தசரத மலை கூட அங்கே இருக்கலாம்'' என்று ஆசை காட்டினான். உடனே பீமனும் அவனுடன் கிளம்பினான். செல்லும் வழிகளில் பல தொல்லைகளை சந்தித்தாலும் பீமன் அவனுடைய பலத்தால் எல்லாவற்றையும் சமாளித்தான். இரண்டு மாதங்கள் ஆகியும் அவனால் தசரத மலையை கண்டுபிடிக்க முடியவில்லை. அவனும் தோல்வியுடன் ஊர் திரும்பினான்.

கிழக்கு திசையில் சென்ற சோமன் மல்லிகாபுரி என்ற ஊரை அடைந்தான். அவனுடைய நீச்சல் திறமையைக் கண்ட மேகநாதன் என்பவன் "தம்பி அருகே மகரத்தீவு என்ற அழகான தீவு இருக்கிறது. அங்கே போய் பார்க்க வேண்டும் என்று எனக்கு ஆசை. அங்கே முதலைகள் இருப்பதால் யாரும் என்னுடன் வரத்தயாராக இல்லை. நீ என்னுடன் வருகிறாயா? நீ தேடும் அந்த தசரத மலை கூட அங்கே இருக்கலாம்" என்று கூறினான். அதைக் கேட்ட சோமனும் அவனுடன் புறப்பட்டான். நீண்ட நாட்களுக்குப் பின் மிகுந்த சோதனைகளை சந்தித்து மகரத்தீவை அடைந்தான். அங்கே காட்டுவாசிகள் அவர்கள் இருவரையும் பிடித்து முதலைகள் இருக்கும் குட்டையில் போட்டனர். சோமன் அவைகளை சாமர்த்தியமாக தன் கத்தியால் தாக்கி அங்கிருந்து தப்பினான். காலக்கெடு முடிந்து விட்டதால் அவனும் ஊருக்குத் திரும்பினான்.

இந்த இடத்தில் வேதாளம் கதையை நிறுத்தியது."மன்னா, அந்த மூவரில் தத்துப்பிள்ளையாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர் யார்?"என்று கேட்டது."பீமனும் சோமனும் நிறைய சோதனைகளை சந்தித்தாலும் அதை அவர்கள் தாங்கள் கற்றுத்தேர்ந்த திறமையால் செய்தனர். ஆனால் ராமனோ தனக்கு பழக்கமில்லாத, மனதிற்கு பிடிக்காத வேலையை, தன் தகுதியை கூடப்பார்க்காமல் செய்தான். ஆகவே ஜமீன்தார் அவனை தத்தெடுப்பதே சரியாகும் என்று பதில் கூறினான் விக்ரமன். சரியான இந்த பதிலினால் அவனது மௌனம் கலையவே வேதாளம் தான் புகுந்திருந்த உடலுடன் மீண்டும் சென்று முருங்கைமரத்தில் ஏறிக் கொண்டது.

*-விஷ்வசாந்தி*

## கோப்பல்தமிழ்க் கல்வி மையத்திற்கு உதவ ஒரு எளிய வாய்ப்பு

1. **நீங்கள் அமேசானில் வாங்க விரும்பும் அதே பொருளை , அதே விலையில் [https://smile.amazon.com](https://smile.amazon.com)இணையதளம் மூலம் பெறுங்கள்.**

2. **நீங்கள் செலவு செய்த தொகையில் ஒரு சிறு பகுதி , அமேசான் (Amazon) நிறுவனத்தால் கோப்பல் தமிழ்க் கல்வி மையத்திற்கு நன்கொடையாக வழங்கப்படும்.**

3. **“DFW tamil foundation” என்று *smile.amazon.com* இணையதளத்தில் தேடுங்கள். செந்தமிழ் பணிக்கான உங்கள் ஆதரவைத் தொடங்குங்கள்.**

amazon.com Smile
You shop. Amazon gives.

## நிகழ்வறிவோம்-காஜா புயல்







அண்மையில் தமிழகத்தைத் தாக்கிய காஜா புயல் தமிழக கடலோர மாவட்டங்களில் மிகப்பெரிய சேதத்தை விளைவித்தது உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள், கால்நடைகள், வீடுகள் மற்றும் பள்ளிகள் இப்புயலினால் மிகவும் பாதிப்படைந்துள்ளன. இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிட கோப்பல் தமிழ்க் கல்வி மையம் தம்மால் முடிந்த முயற்சிகளை எடுத்து வருகிறது. காஜா புயல் கரையைக் கடந்த நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் அருகில், ஆயக்காரன்புலம் 3 என்ற கிராமத்தில் உள்ள அரசினர் பெண்கள் மேனிலைப் பள்ளியும் இப்புயலினால் சேதமடைந்தது தெரியவந்துள்ளது. கடலில் இருந்து சுமார் 15 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள இப்பள்ளியில் புயல் மற்றும் பலத்தக் காற்று மணிக்கு 100 முதல் 120 கிலோமீட்டர் வேகத்தில் வீசியதால், ஏராளமான மரங்கள் முறிந்து, கட்டிடங்களும் பழுதடைந்துவிட்டன. அவற்றைச் சீரமைத்து மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் மீண்டும் அவர்களின் கல்வியைத் தொடர உங்களால் முடிந்த நிதியுதவி வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். நிதியுதவி அளிக்க நம் பள்ளியில் நன்கொடைப் பெட்டி அமைக்க ஏற்பாடு செய்யவுள்ளோம். மேலதிக விவரங்களுக்கு பள்ளி நிர்வாகத்தையோ, உங்கள் வகுப்பு ஆசிரியரையோ தொடர்பு கொள்ளவும்.

கடந்த மாதம் நம் பள்ளியின் எட்டாம் நிலை மாணவர்கள், தீபாவளிப் பண்டிகையை ஒட்டி தங்களுக்குப் பிடித்த தீபாவளிப் பலகாரங்களைப் பற்றி கவிதை வாசித்தனர். பெற்றோர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டு மாணவர்களின் திறமையைப் பாராட்டி ஊக்குவித்தனர். இக்கவிதைகளின் தொகுப்பு இதோ உங்கள் பார்வைக்கு...

## முறுக்கு

ரா மணாள
நிலை: 8

கரகர மொறுமொறு முள் முறுக்கு.
எனக்கு அதன் மேல் கிறுக்கு.

அரிசிமாவும் உளுந்து மாவும் சேர்ந்து
செய்ததால் கரகரப்பு.

அம்மா செய்யும் போதே எனக்கு பரபரப்பு.

பாத்திரம் நிறைய இன்னும் இருக்கு.
அது அத்தனையும் எனக்கே எனக்கு!!

ஏனென்றால், எனக்கு அதன் மேல்
கிறா கிறுக்கு.

## முறுக்கு

முறுக்கு தீபாவளி பணடங்களின் முதன்மை
இது என் அம்மாவின் கைப்பக்குவத்தில் மேலும் அருமை

சுற்றுமுறுக்கு, குழல்முறுக்கு, கை முறுக்கு
என இதன் வகைகள் அப்பப்பா!
இதை சுவைக்காதவர்களின் நாவிற்கு
பெரும் இழப்பப்பா!

சுற்றி சுற்றி முறுக்கு செய்யும் கைகளுக்கு
அளிக்க வேண்டும் சாந்தம்!
தீப ஒளி நன்னாளில் ஏழைகளின் வீட்டிலும்
இது ஒரு அங்கம்

என்றும் என்னையும் சேர்ந்த முறுக்கு
என்றென்றும் தமிழர்களின் பாரம்பரிய உணவிற்கு மிடுக்கு!

அருணைஷ்வர் திருமலைசுந்தர்
நிலை 8

## தட்டை

ரம்யா செங்குட்டுவன்
நிலை: 8

வட்ட வட்ட காரமான தட்டையாம்
ஆசை ஆசையாய் அம்மா சுட்ட தட்டையாம்
சுவைக்க சுவைக்க ருசியான தட்டையாம்
கடிக்க கடிக்க கட முட தட்டையாம்
தட்டித் தட்டி செய்தத் தட்டையாம்
தம்பிக்கும் தங்கைக்கும் பிடித்தத் தட்டையாம்
அக்கம் பக்கம் அனைவருக்கும் கொடுக்கலாம்
எல்லோரும் ருசித்து ருசித்து சாப்பிடலாம்

## லட்டு

தமிழ் கவிதை → பி.பு. ஊர்விகா
தமிழ் பள்ளி - 8 ஆம் வகுப்பு

லட்டு லட்டு லட்டு எனக்கு பிடித்த லட்டு
பூந்தி உருட்டினால் லட்டு ஆக்கலாம்
லட்டை உதிர்தால் பூந்தி ஆக்கலாம்
லட்டு சிருசு ருசி பெருசு
லட்டு இனிப்பு என் மனசும் இனிப்பு
லட்டு செய்வதற்க்கு தேவை பக்குவம்
ஒவ்வருவரும் வெற்றி பெற தேவை பொறுப்பு
லட்டுக்கு இனிப்பு எப்படி முக்கியமோ....
அதைப்போல் வழ்கைக்கு ஒழுக்கமும் மிகவும் முக்கி
லட்டு லட்டு லட்டு எனக்கு பிடித்த லட்டு

## லட்டு

ஹரிகிருஷ்ணா

வட்டமான லட்டு தட்டெல்லாம் லட்டு
வட்டமான லட்டு தரமான லட்டு

அம்மா பிடித்த அருமையான லட்டு
அனைவருக்கும் பிடித்த அற்புதமான லட்டு

பூகோள வடிவ இனிப்பான லட்டு
பூலோக வாசிகளுக்கு இனிய லட்டு

தின்னத் தின்னத் திகட்டாத லட்டு
திருமாள் தின்னும் திக்கத்திபான லட்டு

தேனினும் இனியசுவையுடைய லட்டு
தேனிக்காக இன்றே சுவைக்கலாம் லட்டு

## பணியாரம்

எழுத்தாளர்:ரூபேஷ்

எனக்கு பிடித்த பலகாரம்
எங்கள் பாட்டி பணியாரம்
இதில் உண்டு இனிப்பு, காரம்
எங்கள் வீட்டில் செய்வோம் வாரவாரம்
அந்த சுவையில் உண்டு மிகுந்த தரம்
கவிதையில் புரியும் என் உணர்வின் சாரம்

## 'தில்' இருந்தா சொல்லுங்க

*நிலை 5 முதல்  நிலை 8 வரை உள்ள  மாணவர்களுக்கான புதிர் போட்டி:*

இரண்டு பெரியவர்கள் மற்றும் இரண்டு குழந்தைகள் ஒரு நதியை கடக்க விரும்புகின்றனர். படகு ஒன்றை செய்கின்றனர். ஆனால், அதில் ஒரு மனிதரும் அல்லது இரண்டு குழந்தைகள் மட்டுமே செல்ல முடியும்.
நான்கு பேரையும் அக்கரையில் சேர்பதற்கு குறைந்தபட்சமாக படகு எத்தனை முறை நதியை கடக்க வேண்டும்?

*நிலை 3 மற்றும் நிலை 4 மாணவர்களுக்கான புதிர் போட்டி:*

1. ம் சி ட் கா ங் க அ ய ரு

2. ர் தி பா ப் எ பு ர்

3. ற் ட றோ ட் கா ம்



*To submit your answer copy and paste the link or click :* https://goo.gl/forms/V3auuWs036nJ626u2

## குறள் சொல்லும் பொருள்

நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.

சொற்பதம்:

| | |
|---|---|
| நல்லாறு எனினும் | - ஆன்மீகத்தில் நல்ல வழி என்று சொல்லப்பட்டாலும் |
| கொளல் | - கையேந்தி பிச்சை பூண்டு வாழ்வது |
| தீது | -தவறானது |
| மேலுலகம் | - உயர்வான சொர்க்கம் |
| இல்லெனினும் | - இல்லையென்றாலும் |
| ஈதலே நன்று | - கொடுத்து வாழ்வதே சிறப்பு |

சொர்க்கம் கிடைக்கவேண்டி துறவறம் பூண்டு கையேந்தி வாழ்வதை விட, தன்னிடம் இருப்பதை அனைவருக்கும் கொடுத்து வாழ்பவரின் வாழ்வே சிறப்பானது.

## காலத்தை வென்றவர் – *'மிஸ்டர் பீன்'*



'மிஸ்டர் பீன்' என்று அனைவராலும் அறியப்பட்ட இவரின் இயற்பெயர் ரோவன் செபாஸ்டியன் அட்கின்சன் என்பதாகும். 1955 ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் நாள் இங்கிலாந்து நாட்டில் ஒரு ஏழை விவசாயிக்கு மகனாக பிறந்தார். சிறு வயதில் இருந்தே தொடர்ந்து பேச முடியாத ஒரு வகை பேச்சுக் குறைபாட்டால் பாதிக்கட்டவர் இவர். தனது கடின முயற்சியால் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பயின்று முதுகலை பட்டம் பெற்றார். முதன்முதலில் 1979 ஆம் ஆண்டு பிபிசி ரேடியோவில் நகைச்சுவை நிகழ்ச்சிகளை நடத்தத் துவங்கினார். சுமார் 11 ஆண்டுகள் கழித்து தேம்ஸ் டிவியில் மிஸ்டர் பீன் நாடகத்தை தானே எழுதி நடித்தார். அது மிகப் பெரிய வரவேற்பை பெற்றது. அட்கின்சன் மிஸ்டர் பீனாக வானளாவிய புகழ் பெற்றார். 2012 ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் நகைச்சவை நாடகம் நடத்தும் அளவிற்கு அவர் முன்னேறினார். பல திரைப்படங்களிலும் நடித்தார். பிரிட்டிஷ் அரசு பல விருதுகளை வழங்கி அவரை கௌரவப்படுத்தியது. அவரை முன்னிலைப்படுத்தி கார்ட்டூன் படங்களும் எடுக்கப்பட்டு குழந்தைகளின் கதாநாயகன் ஆனார். அவரது கடின உழைப்புக்கு முன்னால் ஏழ்மை ,பேச்சு திறன் குறைபாடு எதுவுமே தடையாய் இருக்கவில்லை .

*-விஷ்வசாந்தி*

## பத்து வித்தியாசங்களைக் கண்டுபிடிக்கவும்

*நிலை 1 மற்றும் நிலை 2*
*மாணவர்களுக்கான புதிர் போட்டி:*











*To submit your answer copy and paste the link or click:*

https://goo.gl/forms/V3auuWs036nJ626u2

## தோழா தோழி

தோழி தியானம் செய்து கொண்டிருந்தாள். அந்த நேரத்தில் தோழன் அவள் வீட்டிற்கு வந்தான். அவள் தியானப் பயிற்சி முடிக்கும் வரை பொறுமையாக காத்திருந்தான். முடித்து விட்டு தோழி அவனருகே வந்தாள்..

காலை வணக்கம் தோழா ..

ஹா வணக்கம் தோழி ..

என்ன தோழி பெரியவர்கள் உடலைக் குறைக்க மேற்கொள்ளும் பயிற்சிகளை எல்லாம் நீ செய்து கொண்டிருக்கிறாய்?

நீ சொன்னது இரண்டுமே தவறு ..இது பெரியவர்கள் மட்டும் செய்யும் பயிற்சியும் இல்லை.. உடலைக் குறைப்பதற்கும் இல்லை ..

இதென்ன புதிதாக சொல்கிறாய் ..

ஆம் தோழா உடலை வலிமையாக்க செய்யும் பயிற்சிக்கு பெயர் யோகாசனம். நான் பயின்றது தியானம். இது மனதிற்கான பயிற்சி. எந்த வயதினரும் இதை செய்யலாம். நம்மை போன்ற சிறுவர்களுக்கு ஞாபக சக்தியை அதிகரிக்கவும், கவனத்தை ஒருமுகப்படுத்தவும் இப்பயிற்சிகள் உதவும். மன அமைதியையும் கொடுக்கும்.

அப்படியெனில் யோகாவும் தியானமும் இணைந்து பயின்றால் உடலும் மனமும் உறுதியாகும் அல்லவா?

நிச்சயமாக தோழா!


நானும் நாளை முதல் தியான வகுப்பில் சேர்ந்து கற்றுக் கொள்ளப் போகிறேன்.

வாழ்த்துக்கள் தோழா !

*- விஷ்வசாந்தி*

## எண்களை வரிசையில் இணைக்கவும்

*மழலை*
*மாணவர்களுக்கான புதிர்*
*போட்டி:*



## விடுகதை

1. இரு கொம்புகள் உண்டு ..வேகமாய் ஓடும் ...விலங்கு அல்ல கால்கள் உண்டு... மனிதன் அல்ல. அது என்ன ?

2. வீட்டிலிருப்பான் காவலாளி .. வெளியில் சுற்றுவான் கூட்டாளி.. அவர்கள் யார் ?

விடை அடுத்த இதழில்...

சென்ற இதழ் விடுகதைகளின் விடைகள்:

1. வெங்காயம் 2. சவப்பெட்டி

*- விஷ்வசாந்தி*

## கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன

**பெற்றோர்களும் மாணவர்களும் தங்கள் படைப்புக்களை அனுப்பித் துளிரில் பங்களிக்க முடியும். உங்கள் கட்டுரைகளை newsletter@coppelltamil.com என்கிற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள். இதழில் வரும் கட்டுரைகளின் படைப்பாளிகள் ஆண்டு விழாவில் கௌரவிக்கப் படுவார்கள்.**

## கோப்பல் தமிழ்க் கல்வி மையம்

***இடம்: IXL Academy, 773 S MacArthur Blvd, #225 Coppell TX 75019;***
***கல்வி நாள்: ஞாயிற்றுக்கிழமை; நேரம்: 5:00—7:00PM***
***www.coppelltamil.com email: connect@coppelltamil.com***

*https://www.facebook.com/CoppellTamil/?view_public_for=1019360444741468* *http://coppelltamil.com/calendar.htm*